

மதுராந்தகம் சட்டமன்ற இடைத்தேர்தலில் போட்டியிடும் தி.மு.க. வெற்றி வேட்பாளர் இ.பரந்தாமன் அவர்களை ஆதரித்து, கழக துணைப் பொதுச் செயலாளர் முன்னாள் அமைச்சர் க. பொன்முடி, சேலம் மத்திய மாவட்டச் செயலாளர் முன்னாள் அமைச்சர் இரா. இராஜேந்திரன் ஆகியோர் சேலம் மத்திய மாவட்ட கழகத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள மதுராந்தகம் வடக்கு ஒன்றியத்திற்குட்பட்ட நெல்வயல் ஊராட்சிக்குட்பட்ட வாக்குச்சாவடி 1,2, மங்கலம் ஊராட்சிக்குட்பட்ட வாக்குச்சாவடி 3,4 ஆகிய ஊராட்சிகளில் உள்ள பொதுமக்களை நேரில் சந்தித்து உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகளை சேகரித்தனர். அருகில் மதுராந்தகம் வடக்கு ஒன்றிய செயலாளர் P.H.சத்யா சாய், சேலம் மத்திய மாவட்ட கழக நிர்வாகிகள், ஊராட்சி கிளைக் கழக நிர்வாகிகள் மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் உள்ளனர்.



தாராபுரம் சட்டமன்ற இடைத்தேர்தலில் கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.ராசா எம்.பி, தஞ்சை மத்திய மாவட்ட கழகச் செயலாளர் துரை. சந்திரசேகரன் எம்.எல்.ஏ வாக்கு சேகரித்தனர். உடன் தஞ்சை நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி , மாவட்ட கழக பொருளாளர் எல்.ஜி. அண்ணா மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.



தாராபுரம் சட்டமன்றத் தொகுதிக்கான இடைத்தேர்தலில் கழக வேட்பாளர் திருமதி.எஸ்.சுகன்யா அவர்களை ஆதரித்து பரப்புரை மேற்கொண்டு வரும் திருச்சி(தெ) மாவட்ட தி.மு.க நிர்வாகிகளோடு, அடுத்தகட்ட தேர்தல் களப்பணிகள் குறித்து மாவட்டச் செயலாளர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆலோசனை மேற்கொண்டார்.



தாராபுரம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல் கழக வெற்றி வேட்பாளர் எஸ்.சுகன்யாவை ஆதரித்து பொட்டிக்காம்பாளையம் ஊராட்சியில் நடைபெற்ற தேர்தல் பொறுப்பாளர்கள் ஆலோசனைக்கூட்டத்தில் கழக துணை பொதுச் செயலாளர் ஆ.ராசா கலந்து கொண்டு ஆலோசனைகளை வழங்கினார். இதில் திருப்பூர் தெற்கு மாவட்ட கழக பொறுப்பாளர், பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி, மடத்துக்குளம் சட்டமன்ற உறுப்பினர் இரா.ஜெயராமகிருஷ்ணன், தாராபுரம் மேற்கு ஒன்றிய கழக செயலாளர் எஸ்.வி.செந்தில் குமார் உள்பட திருப்பூர் தெற்கு மாவட்ட, ஒன்றிய கழக நிர்வாகிகள், பொட்டிக்காம் பாளையம் ஊராட்சி கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### மதுராந்தகம் இடைத்தேர்தலில் கழக வேட்பாளரை ஆதரித்து

# கிணார் ஊராட்சியில் பல்லாவரம் இ. கருணாநிதி தீவிர வாக்கு சேகரிப்பு!

### பகுதிச் செயலாளர்கள் இ. ஜோசப் அண்ணாதுரை – இ.எஸ். பெர்னார்ட் தலைமையில்!

பல்லாவரம், செப். 28-

மதுராந்தகம் (தனி) சட்டமன்ற தொகுதி இடைத் தேர்தலில் பல்லாவரம் வடக்கு மற்றும் தெற்கு பகுதிக்கு ஒதுக்கப்பட்டகிணார் ஊராட்சி பகுதியில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகத் துணைச் செயலாளர் பல்லாவரம் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் இ. கருணாநிதி அவர்கள் பல்லாவரம் கழக நிர்வாகிகள் ஊராட்சி கழக நிர்வாகிகள் மகளிர் அணியைச் சேர்ந்த தாய்மார்கள் 200க்கு மேற்பட்டவர்களுடன் கழக இரு வண்ணக் கொடி கழக வேட்பாளர் ஆதரித்த பதாகைகள் உதயசூரியன் படம் மேளதாளங்கள் முழங்க வீடு வீடாக சென்று வாக்காளர்களை நேரில் சந்தித்து கழக கழக அரசு செய்த பல்வேறு சாதனைகளான மகளிர் உரிமைத்தொகை நான் முதல்வன் திட்டம் இல்லம் தேடி மருத்துவம் இன்னொரு காக்கும் 48 போன்ற பல்வேறு சாதனைகளை விளக்கியும் ஊராட்சி பகுதி முழுவதும் அருமையான சாலைகள் மழைநீர் கால்வாய்கள் மேம்பாலங்கள் போன்ற மக்கள் நல திட்டங்களையும் எடுத்துரைத்து திண்ணையில் அமர்ந்து இத் தொகுதியில் வெற்றி பெற்ற சட்டமன்ற உறுப்பினர் கட்சி மாறியதால் திணிக்கப் பட்ட ஒரு இடைத் தேர்தலை நாம் சந்திக்க வேண்டிய நிலைமை வந்துள்ளது ஆகவே நீங்கள் இதையெல்லாம் சிந்தித்துப் பார்த்து உதயசூரியனுக்கு வாக்களிக்குமாறு ஆதரவு திரட்டினார்.

பல்லாவரம் வடக்கு பகுதி கழகச் செயலாளர் மண்டல தலைவர் இ. ஜோசப் அண்ணாதுரை பல்லாவரம் தெற்கு பகுதி கழகச் செயலாளர் இ.எஸ். பெர்னார்ட் மதுராந்தக தெற்கு ஒன்றிய செயலாளர் பொன். சிவக்குமார் காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் ஜெ.அரசு பல்லாவரம் பகுதி கழக நிர்வாகிகள் கோ, ஜானகிராமன் ச. சிவக்குமார் க.ரமேஷ் கோ, கருணாமூர்த்தி ஜிஎஸ்டி தேவாராஜ், கிஷோர் கிணார் ஊராட்சி கிளைக் கழகச் செயலாளர்கள் வி.வேலாயுதம், கே. உதயகுமார், எம். பழனி ஆகியோர் உடன் இருந்தனர்கள்.

### நாகூர் நகரக் கழகச் செயலாளர்

# எம்.ஆர்.செந்தில்குமார் தந்தை எம்.ராமு மறைவு!

### கழகத்தினர் அஞ்சலி

நாகை, செப். 28-


நாகை மாவட்டம் நாகூர் நகரக் கழக செயலாளர் எம். ஆர். செந்தில்குமார் தந்தை எம்.ராமு மறைவுக்கு கழகத்தினர் அஞ்சலி செலுத்தினர்.

நாகூர் நகரக் கழக செயலாளரும், நாகை நகர் மன்ற துணைத் தலைவருமான எம்.ஆர்.செந்தில்குமார், நாகூர் வார்டு கழக செயலாளர் எம்.ஆர். குணசீலன் ஆகியோர் தந்தை முன்னாள் நாகூர் வட்டக் கழக செயலாளர் எம். ராமு 25.9.2026 அன்று மதியம் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம் மறைந்த ராமுவிற்கு மகன்கள் எம்.ஆர்.செந்தில்குமார், எம். ஆர்.குணசீலன் மகள்கள் வளர்மதிகருணாநிதி, கலைமதி செந்தில்குமார் ஆகியோர் உள்ளனர். நாகூர், திருமலையப்பன் சந்துவில் உள்ள எம்.ஆர்.செந்தில்குமார் இல்லத்தில் வைக்கப்பட்டிருந்த எம்.ராமு உடலுக்கு கழக நிர்வாகிகள், கழகத்தினர் நேரில் அஞ்சலி செலுத்தினர்.

### சத்தியமங்கலம் முன்னாள் ஒன்றிய செயலாளர் – கழக மூத்த முன்னோடி

# அ.கந்தசாமி மறைவு!

### கழகத்தினர் அஞ்சலி!



ஈரோடு, செப். 28-

ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலத்தை சேர்ந்த கழகத்தின் மூத்த முன்னோடியும்,இந்தி எதிர்ப்பு உள்ளிட்ட கழகம் அறிவித்த பல்வேறு போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவரும்,கழக முன்னாள் ஒன்றிய செயலாளர்,முன்னாள் ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர் உள்ளிட்ட பல்வேறு பொறுப்புகளில் மக்கள் பணியாற்றியவரும்,கழக முன்னாள் மருத்துவர் அணி மாவட்ட துணை அமைப்பாளர் டாக்டர்.சற்குணாவின் தந்தையுமான

அரியப்பம்பாளையம் கந்தசாமி (வயது 77) அவர்கள் கடந்த 25.09.2026 அன்று அவரது இல்லத்தில் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

மறைவு செய்தி அறிந்து அன்னாரது உடலுக்கு ஏராளமான கழகத்தினர் மற்றும் பொதுமக்கள் நேரில் அஞ்சலி செலுத்தினர்.

### நடிப்பவர்களுக்கு வாக்களித்தால் மக்கள் பிரச்சினை தீராது!

# மக்களுக்காக உழைக்கக் கூடியவர்களுக்கு துணை நில்லுங்கள்!

### தே.மு.தி.க. பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் எம்.எல்.ஏ. பேட்டி!



விருத்தாச்சலம், செப்.28-

நடிப்பவர்களுக்கு வாக்களித்தால் மக்கள் பிரச்னை தீராது என்று தே.மு.தி.க. பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் கூறினார்.

தே.மு.தி.க. பொதுச்செயலாளரும் எம்.எல்.ஏ.வுமான பிரேமலதா விஜயகாந்த் விருத்தாச்சலத்தில் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

ஆளுங்கட்சி களத்திற்கு வராமல் அங்கேயே உட்கார்ந்து கொண்டு பேசிக் கொண்டிருந்தால் வேலைக்கு ஆகாது. மக்கள் ஓட்டு போட்டு இருக்கிறார்கள். அனைவரும் களத்திற்கு வர வேண்டும். நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் சுமை தூக்கும் தொழிலாளர்களுக்கு ஒரு மூட்டைக்கு பத்து ரூபாய் என்பது பத்தாது. விலைவாசி அந்த அளவிற்கு ஏறி விட்டது. இதில் அரசு கவனம் செலுத்த வேண்டும். ஆனால் அரசின் கவனம் வேறு எங்கேயோ இருக்கிறது. இடைத்தேர்தல் வேறு வந்துவிட்டது. தேவையில்லாமல் ராஜினாமா செய்து இவர்களாகவே ஒரு இடைத்தேர்தலை கொண்டு வந்து விட்டார்கள்.

நேர விரயம் பண விரயம் தான். லஞ்சமே இல்லாத நேர்மையான ஆட்சி என்கிறார்கள். யார் மக்களுக்காக பேசுகிறார்கள், யார் மக்களுக்காக உழைக்கிறார்கள் என்பதை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். ரீல்ஸ் போடுவது, போட்டோ ஷூட் பண்ணுவது இவர்களைதான் மக்கள் நம்புகிறார்கள். யார் மக்களை நேசிக்கிறார்கள், யார் மக்களுக்காக உழைக்கிறார்கள் என்று பார்த்து அவர்களுக்கு மக்கள் துணை நில்லுங்கள், நடிப்பவர்களுக்கு வாக்களித்தால் மக்கள் பிரச்னை தீராது.

இவ்வாறு அவர் கூறினார்.



சேலம் கிழக்கு மாவட்ட செயலாளர் எஸ். ஆர். சிவலிங்கம் எம். பி. ஆலோசனைப்படி மதுராந்தகம் சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தலில், கழகத்தின் சார்பில் போட்டியிடும் வெற்றி வேட்பாளர், வழக்கறிஞர் இ.பரந்தாமன் அவர்களுக்கு ஆதரவாக, பாகம் எண் 266 க்கு உட்பட்ட நல்லாமூர் ஊராடசியில் ஆத்தூர் கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் டாக்டர்.வே. செழியன் தலைமையில் ஒன்றிய கழக நிர்வாகிகள் ராஜேந்திரன் பிள்ளை, அன்பரசு, சேட்டு, மாவட்ட தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் கருணாநிதி,ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் அருண்குமார், துணை அமைப்பாளர் மோகன்ராஜ், ஒன்றிய மாணவரணி பாரத், நரசிங்கபுரம் நகர மன்ற தலைவர் அலெக்சாண்டர், நல்லாமூர் ஊராட்சி கிளை கழக நிர்வாகிகள் சங்கர், நந்தகுமார், சிவா, ஜெயபால், வீரராகவன், தனசேகர், ஹரி ஆகியோர்களுடன் வீடு வீடாக சென்று உதய சூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தனர்.



கழக முப்பெரும் விழாவை முன்னிட்டு மேட்டுப்பாளையம் ஜென்சி தி.மு.க. சார்பில் அபிராமி தியேட்டர் எதிரில் ஜென்சி ஒருங்கிணைப்பாளர் ஆதவன் சதீஷ்குமார் தலைமையில் மேட்டுப்பாளையம் பேருந்து நிலையம் அருகில் நடைபெற்ற அன்னதான நிகழ்ச்சியை சன் புருஷோத்தமன் துவக்கி வைத்தார். இதில் ஜென்சி தி.மு.க. நிர்வாகிகள் வழக்கறிஞர் தினேஷ்குமார், சரவணகுமார், சஞ்சித், ஷெரிப், தலைமை கழக பேச்சாளர் நாக நந்தினி, நிரஞ்சனா, அசோக், பிரவீன் குமார், இப்ராஹிம், கார்த்திகேஷ், திராவிட வீரன், நஸ்ரின், பாரதி, ஆயிஷா, விமல், சபினா, செம்மொழி கௌரி, பாகிம், கார்த்திகேயன், சத்யராஜ், சஞ்சித் சஞ்சய், கோகுல் மணிமேகலை, ராஜேஷ், காயத்ரி உள்பட பலர் கலந்து கொண்டனர்.



மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் சார்பில் தாராபுரம் சட்டமன்ற தொகுதி இடைத் தேர்தலில் போட்டியிடும் கழக வெற்றி வேட்பாளர் எஸ். சுகன்யாவை ஆதரித்து மூலனூர் மேற்கு ஒன்றியம், கன்னிவாடி பேரூராட்சிக்குட்பட்ட எரிசனம்பட்டியில் திருப்பூர் மத்திய மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் எம்.எஸ்.ஆர்.ராஜ் தலைமையில் துணை அமைப்பாளர்கள் செ.ராஜசேகர், முகமது ஜுனைத், மாநகர இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஜீவா ஆகியோர் முன்னிலையில் வீடு வீடாக சென்று உதய சூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தனர். உடன் கன்னிவாடி பேரூர் இளைஞர் அணி அமைப்பாளர் செண்பகவேல், ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளர் பகீர்முகமது உள்ளனர்.